# கும்பகோணம் நகராட்சி

## குடிநீர் விநியோக துணை விதிகள்

கும்பகோணம் நகராட்சி பகுதியிலுள்ள வீடுகளுக்கு மற்றும் இதர இனங்களுக்கும் குடிநீர் இணைப்பு வழங்க 1920–ம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் 130,131(1)(2)(3), 132(1), 132 ஏ மற்றும் 134,135, 306, 308, 309 மற்றும் 310 (1), (2)வது பிரிவுகளின் கீழ் உருவாக்கப்பட்ட துணை விதிகள்

கும்பகோணம் நகராட்சி புதியதாக வீட்டுக் குழாய் இணைப்பு வழங்குதல், குடிநீர் இணைப்பில் மாற்றம், பழுதுபார்த்தல் மற்றும் குடிநீர் இணைப்பு சரியான முறையில் வைத்து இருத்தல் இவைகள் அடங்கும். இதில் வீட்டு உபயோகத்திற்கு அல்லாத பிற இனங்களும் அடங்கும். இந்த விதிகளின் கீழ் குடிநீர் வீணாவதைத் தடுக்கவும், குடிநீர் குழாய் இணைப்பில் தொட்டிகள் அமைத்தல் மற்றும் தீ விபத்திற்கு குடிநீர் வழங்குதல் ஆகியவைகள் இந்த துணை விதிகளில் இடம் பெறுகின்றன.

1) 1) குடிநீர் இணைப்பு பெறுவதற்கான தமிழ்நாடு 1920 ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத் துணை விதிகள் 131–ல் 1வது பகுதி (அ) 132 வது விதிகள் மற்றும் திருத்தப்பட்ட விதிகளின்படி ஒவ்வொரு குழாய் இணைப்பிற்கான விண்ணப்பத்தை கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் வீட்டு உரிமையாளரிடமிருந்து எழுத்து மூலமாக ஒப்புதல் கடிதம் பெற்று படிவம்–அ மற்றும் மதிப்பீடு தயார் செய்து பதிவுகட்டணம் ரூ.100 ( ரூபாய் நூறு மட்டும்) செலுத்தி ஆணையருக்கு அனுப்ப வேண்டும். பதிவுக் கட்டணம் செலுத்தி பதிவு செய்த நாள் கணக்கிட்டு முன்னுரிமைப்பட்டியல் தயாரித்து அதனடிப்படையில் குழாய் இணைப்பு வழங்கப்படும். மேலும் குறிப்பிடப்படும் வைப்புத்தொகை மற்றும் மதிப்பீடு கட்டணங்களை நகராட்சியில் செலுத்தி உத்திரவு பெற்று குழாய் இணைப்பிற்கான பணிகள் துவங்கப்பட வேண்டும். பதிவுக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி வழங்கப்படமாட்டாது.

அ) குடிநீர் இணைப்பிற்காக தயாரிக்கப்படும் மொத்த மதிப்பீட்டில் 10 சதவீதம் சென்டேஜ் கட்டணம் மற்றும் ஆய்வு கட்டணமாக வசூலிக்கப்படும். குறைந்த அளவு கட்டணம் ரூ.750/– (ரூபாய் எழுநூற்று ஐம்பது மட்டும்) வசூலிக்கப்படும்.

ஆ) குடிநீர் திட்டத்தில அரசு கட்டிடங்களுக்கு வைப்புத் தொகை மற்றும் இதர கட்டணங்கள் முன்பணமாக நகராட்சிக்கு செலுத்த வேண்டியது இல்லை. இணைப்பு உத்திரவு பெற்றபின் செலுத்த வேண்டும்.

இ) மேற்கண்ட கட்டணங்களில் வைப்புத் தொகையை தவிர இதர கட்டணங்கள் எதுவும் திருப்பித்தரப்படமாட்டாது அல்லது செலுத்திய தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.

2) குடியிருப்பு உபயோகத்திற்கோ அல்லது குடியிருப்பு அல்லாத உபயோகத்திற்கோ வழங்கப்படும் இணைப்புகளுக்கும் அளவுமானிகள் பொருத்தப்பட்டு அளவுமானி முறையில் கட்டணம் வசூல் செய்யப்படும்.

3) வழங்கப்படும் குடிநீர் குடும்பக் காரணங்களுக்காவாதா அல்லது குடும்ப காரியங்களுக்கல்லாததா என்பது பற்றி திருத்தப்பட்டுள்ள தமிழ்நாடு 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 131–வது பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விரிவுரையின்படி ஒவ்வொரு தருணத்திலும் முடிவு செய்யப்படும்.

4) (அ) ஒரே இணைப்பின் வாயிலாக குடும்ப பயன்களுக்கும் அவையல்லாத பிறப்பயன்களுக்கும் சேர்ந்து எடுக்கப்படும் குடிநீர் குடும்ப பயன்கள் அல்லாத பிறப்பயன்களுக்கான குடிநீருக்குரிய வீதங்களில் கட்டணம் வசூலிக்கப்படும்.

ஆ) நகராட்சி மன்றத்தின் உரிமையான ஆளுகைக்குட்பட்ட நிர்வாகத்திற்குரிய நிறுவனங்களுக்கு கொடுக்கப்படும் பயன் இணைப்புகளும் கூட அளவுமானி கட்டண முறையில் இருக்க வேண்டியதோடு மேற்படி நிறுவனங்கள் பயன்படுத்தும் குடிநீருக்கான காரியங்களை பொறுத்து குடும்ப பயன் மற்றும் அவையற்ற பிற பயன்களுக்கான வீதங்களில் கட்டணம் வசூலிக்கப்படும்.

இ) சொத்துவரி இல்லாத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு கொடுக்கப்படமாட்டாது.

ஈ) கண்காணிப்பு பொறியாளர், நகராட்சிகளின் நிர்வாக ஆணையரகம் அவர்களின் ஆங்கீகாரத்துடனும் மற்றும் அவரால் ஒப்புதல் அளிக்கக்கூடிய வரையறைகளுடன் நகராட்சி மன்றம் தனது நகராட்சி எல்லைலக்குட்பட்ட யாதொரு உள்ளாட்சிக்கோ அல்லது பிற நபருக்கோ குடிநீர் வழங்கப்படும்.

5) குடிநீர் குழாய் பதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் பகிர்மானக் குழாயிலிருந்து ஒரே ஒரு குழாய் இணைப்பு மட்டுமே கொடுக்கப்படுவதோடு இந்த இணைப்பு திருகு குறுங்குழாய் மற்றும் நீர்வரத்து கட்டுப்பாட்டு இதழ் ஆகியவற்றால் முறைப்படுத்தப்படும் எந்த வீட்டிற்கும் வேறு வரிவிதிப்பின் கீழ் வரும் அண்மையில் உள்ள வீட்டிலிருந்தோ அல்லது கட்டிடங்களிலிருந்தோ தற்போது அல்லது இனிமேல் கொடுக்கப்பட இருக்கும் பயன் இணைப்பில் இருந்தோ தண்ணீர் வழங்கப்படமாட்டாது. விளக்கம்:

இத்துணை விதிகளின் இடம் பெறும் குடியிருப்பு (வீடு) என்பது ஒரு பகுதியாக தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டிடத்தை குறிக்கும்.

6) இந்து கோவில்கள், மசூதிகள், மாதா கோவில்கள் ஆகியவற்றிற்கு கொடுக்கப்படும் குடிநீர் அருந்துவதற்கு மட்டுமே, அவ்வாறு வழங்கப்படும் குடிநீர் குழாய இணைப்புகள் கீழ்கண்டவாறு முறைப்படுத்தப்படும்.

அ) வீட்டு உபயோகத்திற்கு வழங்கப்படும் இணைப்பு விதிகள் இதற்கும் பொருந்தும்.

7) இத் துணை விதிகளுக்கு உட்பட்டு குடிநீர் குழாய்களில் உள்ள நீர் விசையின் அளவையும் நீரழுத்தத்தையும் கணக்கில் கொண்டு வீட்டுக் குழாய் இணைப்புகளின் அளவு அவற்றில் பொருத்த வேண்டிய அடைப்பான்கள் திருகுகள் மற்றும் இதர இனங்களையும் குழாய் நீளத்தையும் கணக்கிடுவதை பொறியாளர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவர் நிர்ணயம் செய்வார். ஆதற்கு தக்கவாறு கீழ்க்கண்டவாறு நிர்ணய அளவுகளின்படி அமைக்கப்படும்.

1. 15 எம்.எம். குழாய் இணைப்பு ... 10 எம்.எம். குறுங்குழாய்

2. 20 எம்.எம். குழாய் இணைப்பு ... 15 எம்.எம். குறுங்குழாய்

இது தவிர வேறு அளவு தேவைப்பட்டால் அதை முடிவு செய்து கண்காணிப்பு பொறியாளர், நகராட்சிகளின் நிர்வாக ஆணையரகம் அவர்களின் அனுமதி பெற்றுத்தான் இணைப்புகள் வழங்கப்படும் எல்லா இணைப்புகளிலும் நீர் வரத்து கட்டுப்பாட்டு இதழ் மற்றும் இதர உபகரணங்கள் சோதனை செய்துதர நிர்ணய சான்றிதழ் பெற்றதாகவோ அல்லது கண்காணிப்பு பொறியாளர் நகராட்சிகளின் நிர்வாக ஆணையரகம் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டதாகவோ இருத்தல் அவசியம். எக்காரணங்களைக்கொண்டும் இந்த நிர்ணய அளவு 15 எம்.எம். மேல் இருத்தல் கூடாது. குடிநீர் நுகர்வோர் குழாய்கள் இணைப்புகள் ஆகியவை பொறியாளர் குறிப்பிடும்படி இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் விளக்ககுறிப்பிற்கு உடன்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

8) குடிநீர் இணைப்பு எடுக்கப்படும் தலைப்பிடத்தில் நேர்மட்ட தூரம் 90 மீட்டருக்கு அதிகமாக இருப்பின் அத்தகைய வீட்டுக் குழாய் இணைப்புகள் நகராட்சி நிர்வாக ஆணையரக கண்காணிப்பு பொறியாளரின் ஒப்புதலின்பேரில் மட்டுமே வழங்கப்படும். அத்தகைய பயன் இணைப்புகளின் தன்மை அளவு ஆகியவை நகராட்சி நிர்வாக ஆணையரக கண்காணிப்பு பொறியாளரால் நிர்ணயம் செய்ததாக இருக்க வேண்டும்.

9) அ) குடியிருப்புகளுக்குக் கொடுக்கப்படும் இணைப்புகளைச் சேர்ந்த குழாய்கள், இணைப்புகள் யாவையும் நகராட்சி அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் எளிதாகப் பார்வையிட

வசதியாக பொருத்துதல் வேண்டும். வீட்டு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொருவரும் குடிநீர் இணைப்புகளை பார்வையிட வசதி செய்து தர வேண்டும். அவ்வாறு பார்வையிட முடியாத காரணத்தினால் குழாய் இணைப்பு துண்டிக்கப்படும்.

ஆ) குடிநீர் குழாயில் உள்ள திறப்பான்கள் தண்ணீரில் மூழ்கி இருக்கும் வகையில் அமைக்ககூடாது. ஆல்லது குழாயிலிருந்து சிதறும் தண்ணீர் மற்றும் வீணாகும் குடிநீர் நகராட்சியால் அமைக்கப்பட்டு இருக்கும் கழிவு நீர் கால்வாயிலோ அல்லது கழிவுநீர் குழாயிலோ செல்லும் வண்ணம் அமைக்கப்பட வேண்டும்.

10) அ) அளவுமாணிகள், குழாய்கள் மற்றும் அனைத்து பொருள்களும் ஆணையாளர், பொறியாளர் ஒப்புதலுக்குட்பட்டு வீடுகளில் சொந்தக்காரர்களாலோ, அல்லது வாடகைதாரர்களாலோ வழங்கப்பட வேண்டும். அமைக்கப்பட்டுள்ள அளவுமாளிகள் எப்போதும் நகராட்சி மன்ற அலுவலர்களால் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற ஊழியர்களால் பூட்டி வைக்கப்பட்டு இருக்கும் அல்லது மூடி முத்திரை செய்யப்பட்டு இருக்கும். அளவுமானியின் அளவுகள் ஒவ்வொரு திங்களும் கணக்கிடப்பட்டு பராமரிக்கப்பட்டு வரப்படும்.

ஆ) அளவுமானி குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் வாங்கி பொருத்த வேண்டும். பராமரிப்பு கட்டணம் மாதம் ஒன்றுக்கு 5/- வசூலிக்கப்படும்.

இ) வீட்டின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரால் பொருத்தப்பட்ட அளவுமானிகள் பழுதடைந்துவிட்டால் சொந்த செலவில் அளவுமானிகளை பழுது பார்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். பழுதுபார்த்தல் பணியை நகராட்சி பொறியாளர் மேற்பார்வையில் இரண்டு திங்கள் காலத்திற்குள் ஆணையரின் உத்திரவு பெற்று செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் தருவாயில் குழாய் இணைப்பு துண்டிக்கப்படும்.

ஈ) அளவுமானி பழுதாகும் சமயங்களில் வழங்கப்படும் குடிநீருக்கான கட்டணம் 16-வது துணை விதியின் வரையறுத்ததுள்ள விகிதங்களின்படி குடிநீர் கட்டணங்கள் வசூல் செய்யப்படும்.

11) குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை வசூலித்தல்.

அ) வீட்டு உபயோகம் இணைப்பு ஒன்று ரூ.6000/– ஏற்கனவே உள்ள குழாய் இணைப்புகளுக்கு கூடுதல் வைப்புத்தொகையை இரு சம தவணைகளில் 6 மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும்.

ஆ) வீட்டு உபயோகமற்ற வியாபார நோக்கு இணைப்புகள் இணைப்பு ஒன்றுக்கு ரூ.12000/–

இ) தொழிற்சாலைகள் இணைப்பு ஒன்றுக்கு ரூ.12000/–

12) குடிநீர் கட்டணம்

அ) அளவுமானி மூலம் குடும்ப பயன்களுக்கு வழங்கப்படும் குடிநீருக்கு மாதாந்திர 1000 லிட்டர் (அ) பாகத்திற்கு ரூ.11/— வீதம் குறைந்தபட்ச மாதக்கட்டணம் ரூ.30/— வரை வசூலிக்கப்படும்.

ஆ) குடும்ப காரியங்களுக்கு அல்லாத வியாபார நோக்கு மாதாந்திர காரியங்களுக்கு பயன்படுத்தப்படும் 1000 லிட்டர் அல்லது அதன் பாகத்திற்கு ரூ.30/— வீதம் குறைந்தபட்ச மாதக்கட்டணம் ரூ.300/— வரை வசூலிக்கப்படும்.

இ) தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்தப்படும் 1000 லிட்டர் அல்லது அதன் பாகத்திற்கு ரூ.60/— வீதம் குறைந்தபட்ச மாதக்கட்டணம் ரூ.600/— வரை வசூலிக்கப்படும்.

ஈ) குடும்ப பயன்களுக்கான வழங்கப்படும் குடிநீர் இணைப்பு ஒரு குடும்பத்திற்காக வழங்கப்படுவதாய் கருதப்படும். ஒரு குடும்பத்திற்கு மேல் உபயோகப்படுத்தப்படும் குடிநீருக்கு கூடுதலாய் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும், குடிநீர் கட்டணமாய் ரூ.50/—ம் மாதம் ஒன்றுக்கு கூடுதலாய் வசூலிக்கப்படும்.

உ) அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு வழங்கப்படும் போது எத்தனை குடியிருப்புகள் இருந்தாலும் தக்க அளவிலான குழாய் இணைப்புகள் மட்டும் கீழ்க்கண்டவாறு வழங்கப்படும் இணைப்புகளுக்கு தனித்தனியாக வைப்புத்தொகை மற்றும் கட்டணம் வசூலிக்கப்படும்.

| வ.எண் | குடியிருப்பு | 15 மி.மீ. (அ) 20மி.மீ. பயன்தரும் திருகு குறுங்குழாய் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 4 குடியிருப்பு வரை | ,, | 1 எண்ணம் |
| 2. | 5 முதல் 8 குடியிருப்பு வரை | ,, | 2 எண்ணம் |
| 3. | 9 முதல் 12 குடியிருப்பு வரை | ,, | 3 எண்ணம் |
| 4. | 13 முதல் 16 குடியிருப்பு வரை | ,, | 4 எண்ணம் |
| 5. | 17 முதல் 20 குடியிருப்பு வரை | ,, | 5 எண்ணம் |
| 6. | 21 முதல் 40 குடியிருப்பு வரை | ,, | 6 எண்ணம் |
| 7. | 41 முதல் 70 குடியிருப்பு வரை | ,, | 7 எண்ணம் |
| 8. | 71 குடியிருப்புகளுக்கு மேல் | ,, | 8 எண்ணம் |

13) அ) அளவுமானி முறையிலான கட்டணத்தை குடிநீர் கட்டண கேட்பு அறிவிப்பு கிடைத்த 15 நாட்களுக்குள் நகராட்சி கருவூலத்தில் செலுத்த வேண்டும். ஒவ்வொரு திங்களும் 10ம் நாளுக்குள் அனுப்பும் குடிநீர் கட்டண கேட்பு அறிவிப்பு அதற்கு முந்தைய திங்களில் உபயோகப்படுத்தப்பட்ட குடிநீர் அளவுக்கு உரியதாகும்.

ஆ) மேற்கண்ட துணை விதிகளில் சொல்லப்பட்ட கட்டணங்கள் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் நகராட்சிக்கு செலுத்தப்படமால் இருக்குமானால் ஆணையருக்கு எப்போது வேண்டுமாலும் இணைப்பை துண்டிக்க அதிகாரம் உண்டு.

இ) இந்த துணை விதிகளில் சொல்லப்பட்ட சட்ட திட்டங்களின்படி குடிநீர் வழங்குவதற்கு உரிய கட்டணம் முறைப்படி குறித்த காலத்திற்குள் செலுத்தப்படவில்லை என்றால் சொத்துவரி வசூல் செய்யும் முறையில் உள்ள விதிகளின்படி வசூல் செய்யப்படும்.

ஈ) நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் செலுத்தாததால துண்டிக்கப்படும் இணைப்புக்கு தண்டிப்பு கட்டணம் ரூ.200/–ம் மறு இணைப்பு கட்டணம் ரூ.200/– ஆக மொத்தம் ரூ.400/– வரை வசூல் செய்யப்படும். இத்தொகை கட்டணத்துடன் சேர்த்து வசூலிக்கப்படும் அல்லது தனியாக நகராட்சியில் செலுத்த வேண்டும்.

உ) குழாய் இணைப்பு துண்டிக்கப்பட்ட ஒராண்டு காலத்திற்குள் நிலுவையின்றி குடிநீர் கட்டணத்தை செலுத்தி மறு இணைப்பு பெற்றுக்கொள்ள தவறினால் குழாய் இணைப்பு நிரந்தரமாக துண்டிக்கப்பட்டதாக கருதப்படும்.

14) குடிநீர்உபயோகப்படுத்தாத ஒரு காலாண்டில் பகுதிக்கானகட்டணத்தில் தள்ளுபடி எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது. அவ்வாறு குடிநீர் பயன்படுத்தபடாமலிருக்கும் ஒவ்வொரு முழு காலாண்டிற்கும் ஆணையர் கட்டண தள்ளுபடி வழங்கலாம். ஆனால் அவ்வாறு குடிநீர் பயன்படுத்தாமல் இருந்தால் முன்கூட்டியே ஆணையருக்கு எழுத்து மூலமாக தகவலை தெரிவித்து குடிநீர் இணைப்பு தற்காலிகமாக துண்டிப்பு கட்டணம் ரூ.200/– மறு இணைப்பு கட்டணம் ரூ.200/–ம் ஒவ்வொரு முறையும் வசூல் செய்யப்படும்.

15) அ) அளவுமானியின் அளவுகளிலோ அல்லது அளவுமானியில் பிற பழுதுகளோ இருந்தால் இது குறித்த விவரங்களுடன் அளவுமானியின் கணக்கு எடுக்கும் நாளிலிருந்து நான்கு வாரங்கள் அல்லது 30 நாட்களுக்குள் ரூ.200/– வைப்புத் தொகையாக செலுத்தி எழுத்து மூலம் அறிவிப்பு செய்துகொள்ள வேண்டும்.

ஆ) மேலே நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் செய்யப்படாத புகார்களோ அல்லது வைப்புத்தொகை செலுத்தாமல் செய்யப்படும் புகார்களோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இ) அளவுமானியின் அளவுகளில் அல்லது அளவுமானியில பழுதுகள் இருப்பது பரிசீலனை செய்து ஆய்வுக்குபின் தெரியவந்தால் வைப்புத்தொகை திருப்பித் தரப்படும். அவ்வாறின்றி அளவுமானி சரியாக இயங்கி இருந்தால் அல்லது அளவுமானியில் பழுதுகள் இல்லை என்ற நிலை இருந்தால் வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படும்.

16) குழாய் இணைப்பில உள்ள அளவுமானி காட்டும் கணக்கீடு சரியானதாக இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டாலும் அல்லது அளவுமானி ஒரு வார காலத்திற்கு மேலாக பழுது அடைந்து இருந்தாலும் குடிநீர் அளவு முந்தைய ஆண்டு இதே மாதத்தில் அல்லது அந்த திங்களில் பயன்படுத்தியதற்கான அளவுகளின் பதில்கள் அல்லது அத்தகைய தகவல்கள் கிடைக்காத சந்தர்ப்ங்களில் ஆணையர் மிகப் பொருத்தமானது எனக்கருதும் புள்ளிவிவரங்களின் அளவுகள் அந்த பிரச்சினைக்குரிய மேற்கண்ட கட்டங்களில் வசூல் செய்வதற்கு அடிப்படையாக கொள்ளப்படும் எனவும் அவ்வாறு கணக்கிடப்படும் நீரின் அளவு அந்தக் கால அளவின் உண்மையில் பயன்படுத்தப்பட்ட நீர் அளவாகக் கருதப்படும். இது குறித்து ஆணையர் முடிவே இறுதியானதாகும்.

17) குடிநீர் வீட்டிணைப்புகளின் பயன் குழாயில் யாதொரு கைவிசை நீரேற்றுக் குழாய் அல்லது விசை நீரேற்றுக் குழாய்களைப் பொருத்த அனுமதிக்கப்படமாட்டாது. பயன்படுத்துவது கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித அறிவிப்புமின்றி இணைப்பு துண்டிக்கப்படும்.

18) குடிநீர் குழாய்களை தொட்டி அல்லது சேமிப்பு தொட்டியுடன் நேரடியாக இணைக்கப்படலாகாது. இந்த இணைப்பு துணை விதிகள் 23 மற்றும் 24க்கு பொருந்தாது.

19) ஒவ்வொரு வீட்டின் உரிமையாளர் மற்றும் குடியிருப்போர் நகராட்சியிலிருந்து குடிநீர் குழாய் இணைப்பு பெற்று இருந்தால் அதை நல்ல முறையில் வைத்துக்கொள்ள வேண்டியது. பழுதுகள் ஏற்பட்டால் அவருடைய சொந்த செலவில் செய்துகொள்ள வேண்டும்.

20) குடிநீர் குழாயில் உள்ள நிலையை பரிசோதனை செய்யும்பொருட்டு அந்தக் குடிநீர் குழாயின் இணைப்பில் உள்ள குழாய் அல்லது இணைப்புகளை ஆணையர் அகற்றலாம். அவ்வாறு பரிசீலனை செய்யும்போது அல்லது வேறு காரணங்களினாலோ குழாய்கள் அல்லது அவற்றின் இணைப்புகளோ பழுதுபட்டு இருந்தால் அதை பழுது நீக்குவதற்கோ அல்லது புதிய இணைப்புகளில் பொருத்துவதற்கோ ஆணையர், குடியிருப்பில் உள்ள உரிமையாளர் அல்லது குடியிருப்போருக்கு ஒரு திங்கள் காலவரை கொடுத்து ஒரு அறிவிப்பு கொடுக்கப்படும். அறிவிப்பில் கொடுக்கப்பட்ட காலவரையறைக்குள் பழுது நீக்கப்படவில்லை என்றாலும் இணைப்புகளை சரிசெய்யவில்லை என்று தெரிய வருமேயானால் பழுது

காரணமாக இணைப்புகளில் நீர் விரையமாகும் அல்லது குடிநீர் தூய்மை கெடும் எனக்கருதினால் ஆணையர் அந்தக்குழாய் இணைப்புகளையும் மற்ற பணிகளையும் நகராட்சி பணியாளர்கள் மூலம் முடித்து அதற்காகும் செலவினை வீட்டின் உரிமையாளர் அல்லது குடியிருப்போரிடம் இருந்து வசூல் செய்யப்படும். அவ்வாறு இல்லையென்றால் இணைப்பு துண்டிப்பு செய்துவிட்டு இணைப்பிற்கு நீர் வழங்குவதை நிறுத்தம் செய்யலாம்.

21) குடும்ப பயன்களுக்காக வழங்கப்பட்ட வீட்டுக் குழாய் இணைப்பில்ருந்து கிடைக்கும் குடிநீரை ஆணையரிடம் எழுத்து மூலமாக முன் அனுமதியின்றி குடும்ப பயன்கள் அல்லாத பிற காரணங்களுக்கும் பயன்படுத்தக்கூடாது. ஆனால் ஒரு குழாய் இணைப்பின் உரிமையாளர் இணைப்புள்ள வீட்டின் குடியிருப்பாளர் குடும்ப பயன்களுக்கான குடிநீரை அவையில்லாத பிறவற்றிற்கு பயன்படுத்துவதாக ஆணையர் அறியவரின் அல்லது அவ்வாறு நம்புவதற்கு காரணங்கள் இருந்தாலும் அவர் தாம் அறிவிக்கும் நாளிலிருந்து துணை விதி 12–ன் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள குடும்ப பயன்களுக்கு அல்லாத வீதத்தில் கட்டணத்தை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளலாம். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை வீட்டிணைப்பின் உரிமையாளர், குடியிருப்போர் செலுத்த தவறினால் அந்த வீட்டிணைப்பை துண்டித்துவிட ஆணையர் உத்திரவிடலாம்.

22) நகராட்சியில் இருந்து பெறப்பட்ட குடிநீர் இணைப்பில் யாதொரு கருவியை வைத்து நீரேற்று குழாய் அமைத்தல் அல்லது விசை நீரேற்றும் கருவி இணைப்பு குழாய் அல்லது அசையும் குழாய் அதுபோன்ற எந்த ஒரு அமைப்பையும் குடிநீர் இணைப்பில் பொருத்தி பெரும் குழியில் இருந்து குடிநீர் ஈர்க்கப்படக்கூடாது. அவ்வாறு ஈர்ப்பது கண்டுபிடிக்கப்பட்டால் இணைப்பு துண்டிக்கப்படுவதன் அவ்வாறு நீர் ஈர்க்கும் மின் மோட்டார் மற்றும் ஏனைய கருவிகள் பறிமுதல் செய்யப்படும். அப்பொருட்கள் யாவும் திருப்பிதரப்படமாட்டாது. மேலும் மின் இயக்கி மற்றும் ஏனைய கருவிகள் பொருத்தமாட்டேன் என்ற உத்தரவாதத்துடன் ரூபாய் 7000/–(ரூபாய் ஏழாயிரம் மட்டும்) அபராதத் தொகை பெற்று கொண்ட பின்புதான் குடிநீர் இணைப்பு வழங்கப்படும். 2–வது தடவையாக மின் கருவிகள் வைத்து ஈர்ப்பது கண்டுபிடிக்கப்பட்டால் இணைப்பு நிரந்தரமாக துண்டிக்கப்படுவதுடன் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

23) பொதுக்கழிப்பிடம், சிறுநீர் கழிக்குமிடம்,மலக் கழிப்பிடம் ஆகியவற்றிற்கு குடிநீரின் குழாயிலிருந்து இணைப்புக் கொடுக்கப்படவேண்டுமானால் இதற்காக ஒரு தொட்டியினை அமைத்து அதற்குத் தேவையான உபகரணங்களுடன் பொருத்தி நகராட்சி பொறியாளர் முடிவு செய்யுமிடத்தில் நிறுவப்படவேண்டும்.

24) கொதிகலன்களுக்கு நகராட்சியின் பகிர்மான குழாய்களிலிருந்து தேவைப்படுமானால் அதற்கான தனியான தொட்டியிலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர குழாயிலிருந்து நேரடி இணைப்பு வழங்கப்படமாட்டாது. ஒவ்வொரு தொட்டிக்கும் தனியாக பந்த திறப்பான், கண்காணிக்கும் அல்லது எச்சரிக்கை சாதனங்கள் பொருத்தப்பட்டு அவைகளை சரியான முறையில் அணுகி ஆய்வு செய்வதற்கு தகுந்தவாறு அமைக்கப்பட வேண்டும்.

25) தீ விபத்து நேரிடும் சமயங்களைத் தவிர மற்றச் சமயங்களில் நகராட்சியின் ஆணையர், பொறியாளர் அவர்களின் அங்கீகாரம் பெறாதவர்களால் பிரதான குழாய் அல்லது பகிர்மான குழாய் திறப்பான்கள் தீயணைப்புக்கு வைக்கப்பட்டிருக்கும் நீர்க்கருவிகள் ஆகியவற்றை நிறுத்துதல் அல்லது தடை ஏற்படுத்தகூடாது.

26) ஆணையர் அவர்கள் உத்திரவின்பேரில் திருமணம் மற்றும் இதர சந்தர்ப்பங்களில் ஒரு கட்டிடத்திற்கு தற்காலிகமாக இணைப்புகள் வழங்கப்படும். இந்த இணைப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.100/– பெருங்குழாயுடன் இணைக்கும் இணைப்பிற்கு ரூ.200/–ம் அதை திரும்பத்துண்டிக்கும்போது ரூ.200/–ம் கட்டணமாக வசூலிக்கப்படும். இவ்வாறு கொடுக்கப்படும் இணைப்புகளுக்கு இணைப்பு கேட்டவர்களோ அல்லது அவ்வாறு தற்காலிகமாக இணைப்பு கொடுக்கப்படும் கட்டிடத்தின் உரிமையாளர்களோ இந்த இணைப்பு செய்வதற்கு தேவையான பொருட்கள் மற்றும் இதர உபகரணங்கள் அவர்கள் பொறுப்பிலும், செலவினம் செய்துகொள்ள வேண்டும். கூடுதலாக குழாய்கள் தேவைப்படின் ஒவ்வொரு குழாய்க்கும் நாள் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.50 வீதம் வசூல் செய்யப்படும். மேற்படி தற்காலிகமாக இணைப்பு ஒவ்வொரு தருணத்திலும் 5 நாட்களுக்கு மேற்படக்கூடாது.

27) அ) குடிநீர் இணைப்பில் பொருத்தப்பட்ட அளவுமானியை எவரும் வைக்கப்பட்டுள்ள முத்திரை நீக்கவோ அல்லது பூட்டை உடைக்கவோ அல்லது அளவுமானியின் மீது பொருத்தப்பட்ட கண்ணாடியை சேதம் செய்யவோ அல்லது அளவுமானியை திறக்கவோ அளவை பதிவு செய்யும் பகுதியை தடை செய்யவோ கூடாது.

ஆ) குடிநீர் வழங்கும் அளவுமானி கருவி பதிவு செய்வதற்கு முன்னாள் குடிநீரை அல்லது அளவுமானியை அப்புறப்படுத்தவோ அனுமதிப்பர்ாடமாட்டாது அல்லது அதற்கு காரணமாக இருத்தல் கூடாது.

28) அ) இந்த துணை விதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னாள் கொடுக்கப்பட்ட எல்லா குடிநீர் இணைப்புகளுக்கும் பொருந்தும். அவ்வாறு உள்ள குடிநீர் இணைப்புகள் பயன்படுத்தப்பட

வேண்டுமானால் நகலாட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய எல்லா கட்டணங்கயையும் குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் ஏற்றுக்கொண்டால் அவ்விணைப்புள் அதிகார பூர்வமாக செல்லதக்கதாய் ஏற்றுக்கொள்ளப்படும். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தொகை செலுத்தத் தவறினால் இந்த இணைப்புகளை நகராட்சியின் ஒப்புதல் பெறாத இணைப்புகளாக கருதி குழாய் இணைப்பு நிரந்தரமாக துண்டிக்கப்படும்.

ஆ) குடிநீர் இணைப்புகளுக்கு ஏற்கனவே நடைமுறையில் இருந்த செயல்முறைகள் திருத்தப்பட்ட துணைவிதிகள் அமுலுக்கு வரும் நாளிலிருந்து செல்லதக்கவை ஆகாது.

29) குடிநீர் வழங்கும் ஆதாரத்தில் நீர் பற்றாக்குறை இருப்பதாகவோ அல்லது குடிநீர் குடும்ப பயனுக்காகவோ அல்லது பிற காரியங்களுக்கு வழங்கப்படும் குடிநீர் தவறுதலாக பயன்படுத்துவதற்காகவோ அல்லது இணைப்புகள் வேண்டுமென்றே பழுதாக்கப்படுகிறது என்று தெரியவந்தாலோ 24 மணிநேர அவகாச எச்சரிக்கை அறிவிப்பு கொடுத்து இணைப்பு துண்டிக்கும் உரிமை நகராட்சி மன்றத்திற்கு உண்டு. இத்தகைய சமயங்களில் ஏற்படும் எந்த இழப்பிற்கும் நட்டத்திற்கும் நகராட்சி மன்றமோ அல்லது ஆணையரோ பொறுப்பாளி அல்ல என தெரிவிக்கப்படுகிறது.

30) மேற்சொன்ன விதிகளை மீறும் அல்லது சேதமிழைக்கும் நபர் எவரும் கீழ்க்கண்டவாறு தண்டனை பெறத்தக்கவராவார்.

அ) ரூ.500/— துணைவிதி 22 தவிர இதர துணை விதிகளில் எந்த விதிகளை மீறினாலும் ரூ,500/— (ரூபாய் ஐநூறு மட்டும்) வரை அபராதமும் குற்றத்தை நிறுத்துமாறு எச்சரிக்கை கொடுக்கப்பட்ட பின்பும் தொடர்ந்து செய்யப்படுமானால் தொடர் அபராதமாக நாள் ஒன்றுக்கு ரூ.25 (ரூபாய் அருபத்தி ஐந்து ) வீதம் விதிக்கப்படும். மீண்டும் அதே நாள் ஒன்றுக்கு ரூ—25 (ரூபாய் இருபத்தி ஐந்து) வீதம் விதிக்கப்படும், மீண்டும் அதே குற்றம் இழைக்கப்பபடுமானால் குழாய் இணைப்பு துண்டிப்பதுடன் நீதித்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

32) குடிநீர் இணைப்பு தேவைப்படுவோர் (படிவம் அ) ரூ.50/— நகராட்சி கருவூலத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

**பொது குடிநீர் குழாய்க்கான துணைவிதிகள்:**

1) எவரும் பொதுக்குடிநீர் குழாய் இணைப்புகளில் இருந்தோ, தீ அணைப்புக்காக வைக்கப்பட்டிருக்கும் குழாய் இணைப்புகளில் இருந்தோ வேண்டுமென்றோ அல்லது அசட்டையாகவோ குடிநீர் வெளியேறி வீணாக செல்லும்படி விடக்கூடாது.

2) அ) எவரும் 30 லிட்டர் கொள்ளளவிற்கு மேற்படாத பாத்திரங்களால் அன்றி வேறொன்றிலும் குடிநீர் குழாயில் இருந்து குடிநீர் பிடித்தல்கூடாது.

ஆ)குடும்ப பயன்களுக்காக அன்றி பிற உபயோகங்களுக்கு பொது குடிநீர் குழாய்களிலிருந்து குடிநீர் பிடிக்கக்கூடாது.

இ) பொது குடிநீர் குழாயிவோ அல்லது கால்நடைகளுக்காக அமைக்கப்பட்டிருக்கும் தொட்டியில் எவரும் குளிப்பதோ அல்லது துணிணிள் துவைப்பதோ, வண்டிகள் கழுவுவதோ, பிராணிகளை குளிப்பாட்டுவதோ கூடாது.

ஈ) மற்றவர்கள் காத்திருக்கையில் பொது குடிநீர் குழாயில் இருந்து ஒருவர் ஒரு முறைக்கு மேல் தொடர்ந்து பிடிக்கக்கூடாது.

3) விபத்து நேரிட்ட காலங்களில் தீ அணைப்பதற்கு அன்றி பிற காரியங்களுக்காக எவரும் தீ அணைப்புக்காக பொருத்தப்பட்டுள்ள குழாய் இணைப்பில் இருந்து நீர் எடுத்தல் கூடாது.

4) தீ விபத்தின்போது தீயினை அணைப்பதற்காக அன்றி மற்றபடி எவரும் பொது குடிநீர் குழாயில் இருந்தோ தீ அணைப்புக் குழாயில் இருந்தோ தொடர்ந்து நீர் எடுக்கும் வகையில் அவைகளை இயக்கக்கூடாது, இவ்வாறு தீயணைப்புக்காக அன்றி பிற உபயோகங்களுக்காக பொது குடிநீர் குழாய் அல்லது தீயணைப்பு குழாயில் இருந்து சுயநல அடிப்படையோடு தொடர்ந்து ஒருவரால் குடிநீர் எடுக்கப்பட்டால் அவர் துணைவிதிகளை மீறி நடந்ததாக கருதப்படுவதுடன் நகராட்சிகளின் சட்ட விதிகளின்படியும் அவர் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

5) அருவருக்கதக்க நோய் அல்லது விரைவில் பரவக்கூடிய நோய் உள்ள எவரும் பொது குடிநீர் அல்லது தீயணைப்புக்குழாயை பயன்படுத்தக் கூடாது.

6) அருவருக்கதக்க நோய் அல்லது விரைவில் பரவக்கூடிய நோய் உள்ள பிராணிகளை அல்லது மேற்சொன்ன நோய்களால் ஏதாவது ஒருநோய் பற்றக்கூடும் என்றும் அவருக்கு தோன்றக்கூடிய அல்லது அவருக்கு தெரிந்திருக்கக்கூடிய பிராணிகளை பொதுக் குழாய் அல்லது தீயணைப்புக் குழாய் இவற்றின் அருகே கொண்டு செல்லக்கூடாது.

7) பொதுக் குடிநீர் குழாய் அல்லது தீயணைப்பு குழாய் ஆகியவற்றை சுற்றி எவரும் அசுத்தம் செய்தல் கூடாது, இவ்வாறு செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் நகராட்சிசிளின் சட்டப்படி அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

8) தீ விபத்து நேரும்போது அன்றி ஆணையர் அவர்களால் அங்கீகரிக்கப்படாத எவரும் குடிநீர் தேங்கும் பிரதான குழாய் பகிர்மான குழாயில் தீயணைப்பு குழாய் அல்லது நகர்மன்ற குடிநீர் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள பொதுக் குழாய் ஆகியவற்றிலிருந்து நீர் உறிஞ்சவோ அவைகளுக்கு சேதம் விளைவிக்கவோ கூடாது.

9) பொதுக் குடிநீர் குழாய் அமைக்கும் இடத்தை சுற்றி வரிசைகள் போடுவதோ வரிசைக்காக கிடைத்த குடங்களை கழுவி குடிநீரை வீணாக்கக்கூடாது.

10) இந்த துணை விதிகளின் எந்த ஒன்றை மீறி நடப்பவர் எவராயினும், மேலும் ஏழு வயதுக்குட்பட்ட குழந்தையை தன்பொறுப்பிலே கொண்ட எவரும் அக்குழந்தை மேற்கண்ட துணை விதிகளை மீறி நடக்காமல் தடுத்து நிறுத்தத்தவறினாலும், அவர் தண்டணைக்குரியவர் என்று கருதப்படுவர். அவருக்கு ரூ.500/– (ரூபாய் ஐநூறு ) வரையிலும் அபராதமாக வசூலிக்கப்படுவதுடன் மேற்சொன்ன துணைவிதிகளை தொடர்ந்து மீறப்படுமானால் நாள் ஒன்றுக்கு ரூ–25/– ரூபாய் இருபத்தி ஐந்து வீதம் தொடர் அபராதமாக விதிக்கப்படும்.

11) புதிய குடிநீர் இணைப்பு பெற விரும்புவோர் மழை நீர் சேகரிக்க அவசியம் பணிமேற்கொண்டிருக்க வேண்டும். இல்லையெனில் குடிநீர் இணைப்பு வழங்கப்படமாட்டாது.

கும்பகோணம்.
நாள் :

நகராட்சி ஆணையர்
கும்பகோணம் நகராட்சி.